**<u>அரக்கோணம் நகராட்சி</u>**
**<u>சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு</u>**

கூட்ட எண்.39 நாள் 10.01.2019.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 18.01.2019 வெள்ளிக்கிழமை கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 18.01.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்(பொ)
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்/2018, நவம்பர்/2018 மற்றும் டிசம்பர்/2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறட்சி காலங்களில□ (மே மற்றும் ஜுன்) குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்த்திடவும் குடிநீர் தட்டுப்பாடு இன்றி சீரான முறையில் வழங்க ஏதுவாக மாநில வறட்சி நிவாரண திட்டம் (SDRF) ன் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (1) | தக்கோலம் நீரேற□ும் நிலையத்தில□ 4 ஆழ□துளை குழாய□ கிணறுகள□ சுத்தம் ( Flushing) செய□தல□ | 1 பணி | 4.00 இலட்சம் |
| (2) | தக்கோலம் நீரேற□ும் நிலையத்தில□ புரசை முதல□ தக்கோலம் நீரேற□ு நிலையம் வரை பைப்லைன□ மாற□ியமைத்தல□ | 1 பணி | 8.00 இலட்சம் |
| (3) | தக்கோலம் நீரேற□ும் நிலையத்தில□ 15 HP, 20HP நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் உதிரி பாகங்கள் விநியோகம் செய்தல் | 1 பணி | 8.00 இலட்சம் |
| | மொத்தம் | **3 பணிகள்** | **20.00 இலட்சம்** |

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.157/2018/இ1**

**பொருள் எண் :03**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க.எண்.38984/2014/P1 நாள்.11.01.2019ல் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ள 19.12.18 அன்று நடைபெற்றுள்ள தூய்மை பாரதம் இயக்கம் 8–வது மாநில உயர் மட்ட குழுவின் ஆய்வுக்கூட்டத்தில் தூய்மை பாரதம் திட்டம் 2018–19ன்கீழ் அரக்கோணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள கீழ் கண்டுள்ள பணிகளுக்கு ரூ.92.60 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற□கும், மேற□படி பணியினை திடக்கழிவு மேலாண்மை துய□மை இந்தியா திட்டத்தில் 2018–19□ன் கீழ் (SBM) மேற□கொள□ள திட்ட பிரேரணையை நகராட்சிகளின□ நிர்வாக ஆணையாளர், சென□னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது,

| Sl No | Details of works | Estimate Cost (Rs in Lakhs) |
|---|---|---|
| 1. | Construction of Micro Compost Center at Sivapatham Nagar Ward-26 | 45.00 |
| 2. | Purchase of 14 Nos Battery Operated Vehicles | 25.20 |
| 3. | Supply of 4 Nos Light Commercial Vehicle 2 Cu.m Capacity 4 wheeler Tipper Auto with Tipping Chassis and Construction of Body Works | 22.40 |
| | Total | 92.60 |

<u>அலுவலககுறிப்பு—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற□படி பணிகளுக்கான திட்ட பிரேரணையை நகராட்சிகளின□ நிர்வாக ஆணையாளர், சென□னை அவர்களுக்கு நகராட்சிகளின□ நிர்வாக மண்டல இயக்குநர்,வேலூர் அவர்கள□ மூலமாக அனுப்பி நிர்வாக அனுமதி பெற அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.92.60 இலட்சத்தில் மத்திய அரசு பங்களிப்பு 55 சதவீதம் மாநில பங்களிப்பு 35 சதவீதம் நகராட்சியின் பங்களிப்பு 10 சதவீதமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2126/இ1//2018**
**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் 2018—19 ஆம் ஆண்டிற்கு கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.12.2018 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூராய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெற்றதை தொடர்ந்து 10.01.2018 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | பொது நிதி | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | அரக்கோணம் நகராட்சிக்கு SLICE 1.) Supply and delivery of 12 ton GVW chassis. SLICE 2.) Supply and delivery of 6000 L Sewer Jetting cum suction machine with kit only விநியோகம் செய்தல் | 49.00 | -- | --- | M/S.ஒசூர் பில்டார்ஸ் | 4.69% |
| | | | | | M/S.விஷ்ணு இன்பராஸ்டக்சர் | 9.69% |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S.ஒசூர் பில்டார்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்கக்கோரி ஒப்பந்ததாரர்க்கு (Nagotiation) கடிதம் அனுப்பப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரரின் 10.01.19 அவர்களின் கடிதத்தில் மதிப்பீடு தொகையில் (0.00%) ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்து கொடுத்துள்ளததை எற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.1911/2018/இ1**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சியின் நகர மன்ற தீர்மான எண்.1455, நாள்.14.08.2015-ன் படி நகராட்சி நிலை வழங்கறிஞர் (Municipal Standing Council) பதவிக்கு 01.04.2015 முதல் 31.03.2018 முடிய முன்றாண்டுகளுக்கு திரு. K. வேணுகோபால் வழக்கறிஞர் என்பவருக்கு வழங்க அனுமதி அளிக்கப்பட்டது தற்போது திரு. K. வேணுகோபால் வழக்கறிஞர் அவர்களின் நகராட்சி நிலை வழக்கறிஞர் பதவி காலம் 31.03.2018-ல் முடிவடையும் தருவாயில் உள்ளது இந்நிலையில் தொடர்ந்து நகராட்சி சம்மந்தமான வழக்குகள் நீதிமன்றத்தில் நடந்து வருவதால் வழக்கின் தன்மைக்கேற்ப ஆஜாராகி வழக்கை நடத்த ஏதுவாக தொடர்ந்து 01.04.2018 முதல் 30.09.2018 வரை ஆறு மாதங்களுக்கு நகராட்சி நிலை வழக்கறிஞர் பதவி காலம் நீட்டிப்பு செய்து திரு. K. வேணுகோபால் வழக்கறிஞருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:- K. வேணுகோபால் வழக்கறிஞருக்கு நகராட்சி நிலை வழக்கறிஞர் பதவி காலத்தை 01.04.2018 முதல் 30.09.2018 வரை நீட்டிப்பு செய்து வழங்கவும் மன்றம் அனுமதிக்காலம்.**

**(ந.க.எண்.856/2013/அ2)**

**பொருள் எண் :06**

நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வண்டி எண்.TN73T4896 என்ற வாகனத்திற்கு அவ்வப்போது ஏற்படும் பழுது வேலைகளை சரி செய்யவும் மற்றும் வருடாந்திர காப்பீட்டு பிரிமியம் செலுத்தவும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கும் தொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1173/15/இ1**

**பொருள் எண் :07**

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை பரவாமல் கட்டுப்படுத்த வீட்டு பகுதியினை முழுவதும் தூய்மையாக வைத்திருப்பவர்களுக்கு வீட்டின் வெளிப்பகுதியில் ஏடிஇஎஸ் கொசுப்புழு இல்லாத வீடு என மகிழ்ச்சி ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு (ADES FREE HOUSE) ஏடிஇஎஸ் கொசுப்புழு இல்லாத வீடு மகிழ்ச்சி ஸ்டிக்கர் ஹ4 அளவில் அச்சடிக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம் தொகைரூ | இயைள டிஜிட்டல் காஞ்சிபுரம் தொகைரூ | கோபி ஆர்ட்ஸ் அரக்கோணம் தொகைரூ |
|---|---|---|---|---|---|
| 1 | ADES FREE HOUSE STICKERS | 10000 | ரூ.53100 | ரூ.54280 | ரூ.64900 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம்**, அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.53,100/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான செலவின தொகை ரூ.53,100/– வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

பொருள் எண் :08

இந்நகராட்சி பகுதியில் 14.11.2018 தேதியில் 30 இடங்களில் மருத்துவ முகாம் நடத்திட பொதுமக்களின் தகவலுக்கும் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் பின்வரும் விவரப்படி பேனர்கள் “8X4” 60 எண்ணிக்கை, “4X3” 3 எண்ணிக்கை, மற்றும் “6X10” 1 எண்ணிக்கை பேனர்கள் தயார் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பேனர் அளவுகள் | எண்ணிக்கை | தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம் தொகைரூ | இயைள டிஜிட்டல் காஞ்சிபுரம் தொகைரூ |
|---|---|---|---|---|
| 1 | “8X4” | 60 | ரூ.22800/– | ரூ.25800 |
| 2 | “4X3” | 3 | ரூ.600/– | ரூ.750/– |
| 3 | “6X10” | 1 | ரூ.700/– | ரூ.700/– |
| | | GST 18 % | ரூ.4338/– | ரூ.4906/– |
| | | மொத்தம் | **ரூ28438/–** | **ரூ32156/–** |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **தேவன் பிரதர்ஸ் ஆர்ட்ஸ், அரக்கோணம்**, அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.28,438/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான செலவின தொகை ரூ.28,438/– வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 1160/எச்1/2018)**

பொருள் எண் :09

இந்நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல், முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு 85 DBC பணியாளர்களை 01.10.2018 முதல் 31.12.2018ம் மாதம் வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 420 நாள் 15.10.2018ல் ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது 10.12.2018 தேதிய டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பற்றிய மாவட்ட வாரந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்கள் தொடர்ந்து DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே 01.01.2019 முதல் 31.03.2019 வரை தொடர்ந்து 85 DBC பணியாளர்களை பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.19.00/– லட்சத்திற்கும் மற்றும் ஏற்கனவே பணி செய்து வரும் மூன்று மகளிர் சுயஉதவிக்குழுக்களின் மூலம் தொடர்ந்து பணி செய்து கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 061/எச்1/2017)**

**பொருள் எண் :10**

இந்நகராட்சி பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கு சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும் மற்றும் தையற்கூலி வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : இந்நகராட்சி பொதுபிரிவு, பொறியியல் பிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.50 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 2710/எச்1/2018)**

**பொருள் எண் :11**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கு காலனிகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.0.60 லட்சத்திற்கு மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி காலனிகள் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கானசெலவினம் ரூ.60,000/—க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 2713/எச்1/2018)**

**பொருள் எண் :12**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்களுக்கான கம்பூட்ஸ், தலைகவசம், ஒளிரும் ஆடைகள், முக உறை, கை உறை ஆகியவைகள் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கானசெலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 2712/எச்1/2018)**

**பொருள் எண் :13**

பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் 2018–2019ம் ஆண்டிற்கு வாங்கி பணியாளர்களுக்கு வழங்க வேண்டியுள்ளதாலும், மேலும் டெங்கு காய்ச்சல் பணியாளர்கள் கூடுதலாக பணி செய்ய வேண்டிய சூழ்நிலையில் தளவாட சாமான்கள் அவசியம் தேவையுள்ளதால் 2018–2019 ஆண்டிற்கு தோராய மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்லது இந்நகராட்சி ஒப்பந்ததாரர்களின் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டு தளவாட சாமான்கள் வாங்கி பணியாளர்களுக்கு வழங்கிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி தளவாடச்சாமன்கள் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கானசெலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 2711/எச்1/2018)**

**பொருள் எண் :14**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை குப்பை சேகரிப்பு செய்து அதனை அப்புறப்படுத்துதல், தினசரி வீடுகள் மற்றும் தெருக்களிலுள்ள மக்கும்

மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை மற்றும் கால்வாய்களை சுத்தம் செய்தல், தூர்வாருதல், தெருக்களை பெருக்குதல் போன்ற பணியினை மேற்கொள்ள தற்போது இந்நகராட்சியில் உள்ள 117 துப்புரவு பணியாளர்களை கொண்டு முழுமையாக அப்புறப்படுத்த முடியாத காரணத்தினால் இந்நகராட்சிக்கு கூடுதலாக மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படையில் 195 பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் ,சென்னை, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.30813/J3/2018 நாள்:11.12.2018.ல் உத்தரவு அளித்துள்ளார். ஏனவே 195 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தினகூலி அடிப்படையில் பணி அமர்த்தி கொள்ளவும், மற்றும் அதற்கான செலவின தொகைகள் விவரம் கீழ்காணும் விவரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ஒரு துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி ரூ.325/– என்ற அடிப்படையில் ஓராண்டுக்கான செலவின விவரம்

| | |
|---|---|
| வேலூர் மாவட்ட ஆட்சியர் துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.325x195 | ரூ.63,375/– |
| ஒரு துப்புரவு பணியாளருக்கு 1 ஆண்டுக்குறிய தினக்கூலி (325x365) | ரூ.1,18,625/– |
| EPF 13.61% | ரூ.16,145/– |
| **ESI 4.75 %** | ரூ.5,635/– |
| ஒரு துப்புரவு பணியாளருக்கு சீருடை (ம) பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஆண்டுக்குரிய தொகை ரூ. | ரூ.3,200/– |
| ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | ரூ.5,931/– |
| மொத்தம் | ரூ.1,49,536/– |
| 195 துப்புரவு பணியாளருக்கு 1 ஆண்டுக்குறிய செலவினம் ரூ.1,49,536 x 195 | ரூ.2,91,59,520/– |

**ஒரு மாதத்திற்கான ஊதிய செலவு ரூ.24,29,960/–**

**1 ஆண்டிற்குரிய செலவு = ரூ.2,91,59,520**

மேற்கண்ட விவரப்படி 195 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் தேர்வு செய்யவும் , 12 மாதத்திற்குரிய தோராய செலவினத்தொகை ரூ.2.93/–கோடிக்கு மன்றத்தின் அனுமதியும், புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மற்றும் இப்பணி குறித்து மாநில அரசிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான செலவினத்தொகைக்கும், மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரரை தேர்வு செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான தோராய செலவினத் தொகை ரூ.2.93 கோடிக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3. புதிய ஒப்பந்தப்புள்ளி மாநில அரசிதழில் பிரசுரம் செய்யும் பணிக்கும்,அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண். 2835/2017/எச்1)**

பொருள் எண் :15

இந்நகராட்சியில் போதிய அளவில் வாகனங்கள் இல்லாத காரணத்தால் ஏற்கனவே வாலாஜா அக்ரோ நிறுவனத்தின் மூலம் ஒரு வாடகை டிராக்டர் நாள் ஒன்றுக்கு ரூ. 1650/- வீதம் 01.10.2018 தேதி முதல் 31.12.2018 வரை பயன்படுத்தி கொள்ள நகரமன்ற தீர்மான எண் 418 நாள் 15.10.2018ல் ரூ.1.60 லட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது 01.01.2019 முதல் 31.03.2019 ஆம் மாதம் வரை ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1.60 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒரு வாடகை டிராக்டர் பயன்படுத்தப்பட்டு வருவதற்கும், மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ. 1.60 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்919/எச்1/2015)

பொருள் எண் :16

இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2018–2019ன் கீழ் 10.01.2019 ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் Bus Bar, Control Pannel ஆகியவற்றை புதியதாக அமைத்து Terminals, Contact Kit, Mat, CT Coil ஆகியவற்றை சரி பார்த்து மாற்றியமைத்தல். | 2.40 | ஆர்.சண்முகம் | 0.43% | S.ரமேஷ்பாபு | 0.45% |
| 2. | தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் தனியார் ஆட்களை கொண்டு பராமத்து இயக்குதல். | 9.65 | ஆர்.சண்முகம் | 0.21% | S.ரமேஷ்பாபு | 1.09% |
| 3. | தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் உள்ள Electronic Digital Flow Meter பழுதுபார்த்தல். | 5.00 | M/S ஸ்ரீ ராஜா கணபதி இன்ஜினியரிங் | 0.02% | M/S சபரி இன்ஜினியரிங் | 0.20% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | விண்டர்பேட்டை மற்றும் ஜூப்ளி ரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் Chlorination Pump புதியதாக மாற்றி அமைத்தல். | 5.50 | M/S ஸ்ரீ ராஜா கணபதி இன்ஜினியரிங் | 0.04% | M/S சபரி இன்ஜினியரிங் | 0.36% |

அலுவலக குறிப்பு : 1. வரிசை எண். 1 முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு வரிசை எண்.2க்கான பணிக்கு மட்டும் ஆணையாளர் மற்றும் தனிஅலுவலலர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் .887/இ1/2017

பொருள் எண் :17

இந்நகராட்சியில் கல்வி நிதி மற்றும் பொது நிதி 2018–2019ன் கீழ் 10.01.2019 ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | காந்தி நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மின்சாரம், கதவுகள் மற்றும் பராமத்து பணிகள் செய்தல் | 5.50 | ஆர்.துரைராஜன் | 0.11% | எஸ்.ரமேஸ்பாபு | 0.05% |
| 2. | காந்தி நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் முதல் மாடியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல். | 10.00 | ஆர்.துரைராஜன் | 0.26% | எஸ்.ரமேஸ்பாபு | 0.01% |
| 3. | பொது நிதி<br>தியாகி சின்னசாமி தெருவில் RCC பைப் சிறுபாலம் அமைத்தல். | 4.00 | வி.சதிஷ்குமார் | 0.002% | கே.பசுபதி | 0.12% |
| 4. | நேருஜி நகர் 8–வது தெருவில் RCC பைப் சிறுபாலம் அமைத்தல் மற்றும் நகராட்சிக்கு சிண்டெக் டேங்குகள் சப்ளை செய்தல். | 3.00 | வி.சதிஷ்குமார் | 0.001% | கே.பசுபதி | 0.18% |
| 5. | கணேஷ் நகர் 6–வது தெருவில் சிறுபாலம் கட்டுதல். | 1.50 | கே.பசுபதி | 0.004% | வி.சதிஷ்குமார் | 0.116% |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 5 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2017

பொருள் எண் :18

இந்நகராட்சியில் பொது நிதி 2018–2019ன் கீழ் 10.01.2019 ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | புதிய பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் பராமத்து பணிகள் செய்தல் மற்றும் பேருந்து கால அட்டவணை பலகை அமைத்தல், | 6.00 | வி.சதிஷ்குமார் | 0.003 % | கே.பசுபதி | 0.070% |
| 2. | விண்டர்பேட்டை மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் சிமெண்டு சாலை அமைத்தல். | 10.00 | டி.கே.கன்ஸ்டரக்ஸன் | 0.002 % | டி.கேசவன் | 0.19% |
| 3. | காலிவாரி கண்டிகை பிரதான சாலை, திருப்பூர் குமரன் தெரு மற்றும் பண்டித ஜவஹார்லால் நேரு தெருவில் சாலையை சமன் செய்து சீரமைத்தல். | 9.00 | ஜி.அண்ணாதுரை | 0.02% | பி,வீரராகவன் | 0.23% |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 3 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .887/இ1/2017

பொருள் எண் :19

இந்நகராட்சியில் பொது நிதி 2018–2019ன் கீழ் 10.01.2019 ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | கணேஷ் நகர் 13–வது தெருவில் சிறுபாலம் கட்டுதல். | 3.20 | கே.பசுபதி | 0.006% | வி.சதிஷ்குமார் | 0.21% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | கிழக்கு தர்மராஜ கோயில் தெருவில் சிமெண்டு சாலை மற்றும் ஆழ்துளை குழாய் கிணற்றிற்கு சிறு மின் விசை பம்பு பொருத்தி இயக்குதல். | 4.00 | வி.சதிஷ்குமார் | 0.002% | கே.பசுபதி | 0.11% |
| 3. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் கிடங்கு கட்டுதல். | 9.80 | பி,வீரராகவன் | 0.05% | கே.பசுபதி | 0.49% |
| 4. | வி.பி கோயில் தெரு, ஏ.என் கண்டிகை 2–வது 3–வது மற்றும் 4–வது தெருக்களில் சாலையை சமன் செய்து சீரமைத்தல் | 7.00 | ஜி.அண்ணாதுரை | 0.02% | பி,வீரராகவன் | 0.22% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2017**

**பொருள் எண் :20**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வேலூர் அவர்களின் செயல்றை கடித எண்.அ2/769/2018 நாள்.13.12.2018ல் கடிதத்தின்படி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019 ஆம் ஆண்டிற்கு கீழ் அரக்கோணம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்குறிப்பிட்ட இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை நகர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகராட்சி, வார்டு எண்.31ல் 6–வது தெருவில் T N நகர் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல். | 9.50 |
| 1. | அரக்கோணம் நகராட்சி, வார்டு எண்.22ல் அசோக் நகர் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல். | 9.50 |

அலுவலக குறிப்பு: 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1241/2017/இ1

**பொருள் எண் :21**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பின்வரும் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

| வ.எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.10 மோசூர் ரோடு, வார்டு எண்.11 ராஜாபாதர் தெரு, | 9.00 |

| | | |
|---|---|---|
| | வார்டு எண்.13 மசூதி தெரு, வார்டு எண்.14 பழைய பேருந்து நிலையம் வார்டு எண்.22 ரத்தன் சந்த் நகர், வார்டு எண்.24 ஏ,பி,எம் சர்ச் மற்றும் வார்டு எண்.26 அம்மன் கோயில் தெருவில் சிறு மின் விசைப்பம்பு அமைத்தல். | |
| 2. | வார்டு எண்.29 பழனிப்பேட்டை அங்களாம்மன் கோயில் அருகில் சிறு மின் விசைப்பம்பு அமைத்தல். | 2.70 |
| 3. | வார்டு எண்.29 போல் தெரு, வார்டு எண்.31 ஏ.என் கண்டிகை வார்டு எண்.33 சத்தியவாணி முத்து நகர் மற்றும் வார்டு எண்.35முனுசாமி தெருவில் சிறு மின் விசைப்பம்பு அமைத்தல் | 7.00 |
| 4. | நகரில் உள்ள 36 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோகம் பிரதான குழாய்களை பராமரிப்பு பணிகள் செய்தல் | 9.80 |
| 5. | கல்லாறு தலைமை நீரேற்று நிலையத்தின் 150 mm DI பிரதான குழாயை கல்லாறு ஆற்றுப்பாலம் அருகே மாற்றி அமைத்தல். | 9.00 |
| 6. | நகரில் உள்ள 36 வார்டுகளில் உள்ள சிறு மின் விசைப்பம்புகள் மற்றும் கைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கி பராமரித்து இயக்கி தருதல். | 9.00 |
| 7. | நகராட்சிக்கு சொந்தமான அலுவலகம் மற்றும் அசோக் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு சோடியம் ஹபோகுளோரைடு திரவம் விநியோகம் செய்தல் | 7.00 |

மேற்காணும் பணிகளை எதிர்வரும் கோடைகாலத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் பணிகளை செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி பணிகளுக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :22**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு மழைநீர் கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகளுக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.01 அண்ணா தெருவில் சிறுபாலம் அமைத்தல். | 1.00 |
| 2. | வார்டு எண்.21 பாலசுந்தரம் தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 3. | வார்டு எண்.01 அவில்தார் முனுசாமி தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 1.20 |
| 4. | வார்டு எண்.19 தர்மராயன் தெருவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 1.20 |

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :23**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் சாலைகள் பழுதடைந்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. புதியதாக சாலைகள் அமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் போக்குவரத்து நலனை கருத்தில்

கொண்டு மேற்படி பணிகளுக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.07 ஈஸ்வரன் கோயில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 3.00 |
| 2. | வார்டு எண்.28 டி.பி மெயின் ரோடு நீதி மன்றம் அருகில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 6.00 |
| 3. | வார்டு எண்.22 ரத்தன் சந்த் நகர் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் நுன் உரக்கிடங்கிற்கு சிமெண்ட் சாலை மற்றும் நடைமேடை அமைத்தல். | 6.00 |
| 4. | வார்டு எண்.23 குள்ளன் குட்டை தெருவில் சிமெண்ட் சாலை மற்றும் குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல். | 3.00 |

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :24**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 22ல் உள்ள ரத்தன்சந்த் நகர் பகுதியில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குப்பைகளை Micro Compost முறையில் உரமாக்கும் மையத்திற்கு (Micro Compost Center) சுற்றுசுவர் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.8.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :25**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட காந்தி பூங்கா மற்றும் விண்டர்பேட்டை பகுதியில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக்க ONSITE COMPOST கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டியுள்ளது. . இதற்கான மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :26**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் அரக்கோணம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டம் 2014 சம்பந்தமான

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5 அவர்களின் கடிதம் 7366/2016/UPA2/ நாள்–03.09.2018 ல் தெரிவித்துள்ளவாறு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குபடுத்தவும், அரக்கோணம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

## அத்தியாயம்–1
## முதனிலை

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் அரக்கோணம் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

   (2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

   **(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

   **(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

   **(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

   **(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

   **(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2
## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

**3.(1)** பாத சாரçfë‹ elkh£l« (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து அரக்கோணம் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களிள்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 5 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 15 மீட்டர் நீளத்திற்கு

(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்
வாயிலிருந்து 15 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

## 4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–

எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

## 5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–

சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3
## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்
### 6. விற்பனை கட்டணம்–

**(1)** சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி **(1)**ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| **வ. எண்.** | **சாலையோர விற்பனையாளரின் வகை** | **பரப்பளவு** | **விற்பனை கட்டணம்** |
|---|---|---|---|
| **1.** | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1200/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1800/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.3600/–க்கு குறையாமல் |
| **2.** | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.600/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1200/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1800/–க்கு குறையாமல் |
| **3.** | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1200/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1800/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.3600/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.600/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1200/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.1800/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.600/– |

**(3)** மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,–**

**(1)** சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

**(2)** உப விதி **(1)**யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு ரூ. 5000/–க்கு குறையாமலும், ரூ. 25000/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

**(3)** பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 5% சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

*அரக்கோணம் நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின்படி முடிவு செய்யப்பட வேண்டும்.)*

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில்,

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது, மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம்– 4

## பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.–**

(1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்.–**

எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,–**

(1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

<u>அலுவலக குறிப்பு:</u>

1) சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018யை அங்கீகரித்து மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) மாவட்ட அரசிதழ் (ம) தினசரி நாளிதழில் வெளியீடு செய்திடவும் அதற்கான செலவினங்களை திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண் :27**

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை– 5 அவர்களின் கடிதத்தில் தெரிவித்தபடி, அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகர்ப்புற சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் திட்டம் மற்றும் விதிகள் 2015ன்படி Vending zone, Restricted vending zone ஆகிய பகுதிகளில் கடை அமைக்க விரிவான அமுல்படுத்துதல் திட்டம் (Detailed Impementation Plan) தயாரிக்கவும் மற்றும் Power Point தயாரித்து வழங்கவும் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. M/s.Biztrace,
   37, Meanee Avenue Tank Road, --- 90,860/-
   Bangalore.

2. M/s.Rams Academy,
   12, C.V.Rajagopalan Street, –– 93,220/–
   Kanchipuram – 631 503

3. M/s.Sansara,
   48, Vallal Pachiyappan Street, -- 88,500/-
   Kanchipuram.

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s Sansara,No.48, Vallal Pachiyappan Street, Kanchipuram என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:– 1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s Sansara,No.48, Vallal Pachiyappan Street, Kanchipuram என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.**

**2. அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு செயல்முறை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**பொருள் எண் :28**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கீழ்காணும் பொருட்கள் தேவைப்படுகிறது எனவே கீழ்காணும் பொருட்களை கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | மதிப்பீடு லட்சம் ரூ |
|---|---|---|
| 1 | குப்பை லாரிகளுக்கு மூடு வலைகள்<br>“25 X 15” அளவில் 6 எண்ணிக்கை மற்றும்<br>“12 X 8” அளவில் 8 எண்ணிக்கை | ரூ.4.00 |
| 2 | லெமன் கிராஸ் ஆயில் (200 லிட்டர்) | ரூ.6.00 |
| 3 | இ.எம்.சொலிசன் (EM SOLUTION) (500 லிட்டர்) | ரூ.5.00 |

**<u>அலுவலக குறிப்பு :</u> பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 033/எச்1/2019)**

**பொருள் எண் :29**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நகராட்சிகளில் CCTV Camera பொருத்தப்படவும் மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் உள், வெளிப்புற பணியாளர்கள், DBC, Animaters, மற்றும் Out Sourcing என அனைத்து பணியாளர்களும் தங்களின் வருகைப்பதிவேட்டை டிஜிட்டல் முறையில் Bio Metric முறையில் பதிவு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது இதன்படி பின்வரும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கும், பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகராட்சியில் CCTV Camera பொருத்தி இயக்கம் செய்து தருதல் | **2.50** |
| 2. | டிஜிட்டல் முறையில் Bio Metric முறையில் வருகைப்பதிவேடு செய்ய இயந்தரங்கள் வாங்கி பொருத்தி இயக்கி தருதல் | **2.00** |

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.377/2018/இ1**

**பொருள் எண் :30**

இந்நகராட்சியில் தன்னிறைவு திட்டம் 2018–19ன் கீழ் 18.12.2018 மற்றும் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் **2018–2019**ன் கீழ் **08.01.2019**ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப் பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | <u>**தன்னிறைவு திட்டம் 2018–19**</u> வார்டு எண்.26 T.B ரோடு நீதிமன்றம் அருகில் பேரூந்து நிழற்குடை அமைத்தல். | **5.00** | கேன்ஸ் டெக்னாலஜி | 0.01% | சி.எம்.ஐ எண்டர்பிரைசஸ் | 5.46% |
| 2. | <u>**சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019**</u>அரக்கோணம் நகராட்சி, வார்டு எண்.31ல் 6–வது தெருவில் T N நகர் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல். | **9.50** | எஸ்.கஸ்தூரி | 0.345% | ஜி.ரவி | 1.687% |
| 3. | அரக்கோணம் நகராட்சி, வார்டு எண்.22ல் அசோக் நகர் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல். | **9.50** | எஸ்.கஸ்தூரி | 0.345% | ஜி.ரவி | 1.687% |

**அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .1888/இ1/2018**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**